விரும்பினால், இந்த அமைச்சரவை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நண்பர் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகிறது.

(ii) சென்னை நகரிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் டாக்டர்கள், ஹவுஸ் சர்ஜன்கள் வேலைநிறுத்தம்

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்கீழ், அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட காரியத்தைக் குறித்து விவாதிக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :

"சென்னை நகரிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், டாக்டர்கள், ஹவுஸ் சர்ஜன்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதால் நோயாளிகள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் இது பற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவை முன்னவர் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்வு காண இருக்கிறார்கள். நேற்றும், அதற்கு முன்னாளும் ஹவுஸ் சர்ஜன்களும், அசிஸ்டெண்ட் சர்ஜன்களும் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாகப் பொது மக்களுக்குப் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தீர்வு காண முற்பட்டிருக்கிறார்கள். சிவில் சர்ஜன்கள் அத்தனைபேரும் முழுநேரமும், பல்வேறு அசிஸ்டெண்ட் சர்ஜன்களும் இருந்து எமர்ஜன்சி கேசாக இருந்தால் மட்டும் கவனித்து, சாதாரண கேசுகளை ஒதுக்கி வருகிறார்கள். இப்போது ஹவுஸ் சர்ஜன்களும், மற்றவர்களும் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து வேலையில் ஈடுபட வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்வதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் அரசாங்கப் பெரிய மருத்துவ மனைக்குச் சென்றிருக்கிறார்கள். தக்க நடவடிக்கைகளை உரிய முறைப்படி மேற்கொள்ள முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் ஈடுபட்டு, முயன்று வருகிறார்கள். ஆகவே, இதுகுறித்து இந்த அவையில் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய மருத்துவ மனைக்குப் போய் இருப்பதாகச் சொன்னார்கள். திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

பேரவை அனுமதியுடன் ஒற்றிவைப்புத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

(iii) சென்னை நகரில் டாக்டர்கள் வேலை நிறுத்தம்

நண்பகல் 12-00

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்கச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன் :—

"சென்னை நகரில் மாணவர் விடுதிகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி, மாணவர்களுக்குப் பாதுகாப்புக் கோரி டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பது."

டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இப்போதுதான் அவர்களுடன் விவாதம் நடத்தப் போயிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. நான் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் மாணவர்களைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நேற்று இரவு நான் இரண்டொரு கல்லூரி விடுதிகளுக்குப் போய் இருந்தேன். அங்கே மாணவர்கள் மிகவும் பயந்து, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கையில் தடிகளை வைத்துக்கொண்டு இரவு பூராவும் தூங்காமல் இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக வெங்கடேசுவரா ஹாஸ்டலில் சர்க்காருக்கு எதிரான போஸ்டர்களை அவர்கள் ஒட்டியிருப்பதாகவும், அதை பக்கத்தில் உள்ள பொதுமக்கள் கண்டிப்பதால் அதை எடுத்துவிடவேண்டுமென்றும், இல்லையென்றால் பாதுகாப்பு கொடுக்க முடியாது என்றும் போலீசார் சொன்னதாகச் சொல்கிறார்கள். இருந்தும் போஸ்டர்களை வைத்திருக்கிறார்கள். அது எப்படி இருந்த போதிலும் நான் இரண்டு பிரச்சினைகளைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஒன்று, மாணவர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைத் தீர்த்தாக வேண்டும். அது எப்படி உருவாகியிருக்கிறது, யாரால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. அவர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைத் தீர்த்தாக வேண்டும்.

இரண்டாவதாக 25-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதிவரை 6 நாட்கள் ஆகிவிட்டன. சகஜ நிலைமை வருவதற்கு இன்னும் பதினைந்து நாட்களாவது ஆகக்கூடும் என்று கருதுகிறேன். இந்த நிலையில் மாணவர்களால் எப்படிப் படிக்க முடியும், எப்படிப் பரிட்சை எழுதப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஏப்ரல் 25-ம் தேதி முதல் 30-ம் தேதிக்குள் சர்வகலாசாலைப் பரிட்சைகள்